[31st January 1972

தேர்ந்தெடுத்து மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று இருந்ததை ஆண்டுக்கு ஒருமுறை சேர்த்துக்கொண்டால் போதுமென்றும் முடிவு செய்யப் பட்டது. 470 இடங்கள் ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதியோடு பெறப் பட்டன. மேற்கொண்டு 120 இடங்கள் பெறப்பட்டன. அப்படிப் பெறப்பட்ட 120 இடங்கள் நிரப்பப்பட வேண்டாமென்ற முடிவுக்கு வந்ததும் அவர்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி ஏற்படும் முறையில் வகுத்துக்கொண்டதன் காரணமாக அவர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

Revised scales of pay for the Headmasters of Madras ***Corporation***

*67 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Corporation of Madras has not paid (i) Revised scales of pay as per the recommendations of the Second Pay Commission to the Headmasters of the Corporation Primary and Middle Schools, (ii) Headmaster's Allowance to Headmasters of Primary Schools and (iii) B.T. scales of pay to qualified graduate Headmasters of Middle Schools; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government in the matter?

சென்னை மாநகராட்சி தலைமை ஆசிரியர்களின் சம்பள விதங்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை மாநகராட்சி, (1) இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளையொட்டி திருத்தி அமைக்கப்பட்ட சம்பள விதங்களை மாநகராட்சி தொடக்க, இடைநிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதும் (2) தொடக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் படி கொடுக்கவில்லை என்பதும் (3) நடுத்தரப் பள்ளிகளின் தகுதி பெற்ற பட்டதாரித் தலைமை ஆசிரியர்களுக்கு பி. டி. சம்பள விதங்களை கொடுக் கவில்லை என்பதும் உண்மையா?

(இ) ஆமெனில், இப்பொருள் குறித்து அரசு எடுத்துக்கொண்ட அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, அவர்களுக்குரிய சிறப்பு ஊதியம் எப்போது கொடுக்கப்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். ஏனென்றால் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் வந்ததன் பேரில்தான், இந்த வினாவை எழுப்பினேன். மாநகராட்சி எப்போது அவர் களுக்குக் கொடுத்தது?

31st January 1972]

மாண்புமிகு டாக்டர் இரா. நெஞ்செழியன் : தலைவர் அவர்களே, 30—7—71 லிருந்து உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் டைரக்டரால் சாங்ஷன் செய்யப்பட்ட செகண்டரி, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வேலைக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டும் அவற்றில் இன்னும் "அப்பாயின்ட் மெண்ட்" செய்யப்படாமலிருப்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

Pension

* 68 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether orders giving effect to the formula of increased pension by addition of Dearness Allowance of December 1966 to the average pay at the time of retirement on superannuation announced in the budget for 1970–71 to Teachers under Aided Agencies and Local Bodies have been issued; and

(*b*) if not, the reasons therefor?

ஓய்வூதியத் தொகை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் கீழ்ப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் ஓய்வு காலத்தில் பெறும் சராசரி ஊதியத்துடன், 1966-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அகவிலைப் படியை இணைத்து, அதிகரித்த ஓய்வூதியத் தொகை வழங்குவதென்று 1970-71 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப் பட்ட செயற்குறிப்புக்குச் செயலுருக் கொடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டனவா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, புதிய ஓய்வு ஊதிய விகிதம் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அமுலாகும் என்று அரசு கூற முடியுமா ?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : The Government decided that in the case of the Government servants retiring from service on or after 26th February 1970, dearness allowance up to the level obtaining in December 1966 shall be reckoned as pay for the purpose of pension and gratuity. என்று ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Government have decided that the above orders will be applicable to all teacher pensioners in non-Government service also including teacher pensioners of aided Colleges.